**சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியம் - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2. முனைபழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3. நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5. நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1. கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சிறைச்சாலை நிறுவனத்திற்கு கிடைக்கின்ற நுகர்வுப் பொருட்களை கணக்கிடுவதற்காக கணக்கீட்டு கொள்கையொன்று அடையாளப்படுத்தப்படிருக்காத காரணத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 7,860,139 ஆன நுகர்வுப் பொருட்கள் பெறுவனவு மற்றும் இருப்பு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து சொத்துக்கள் (கொள்வனவு செய்யும் மற்றும் நன்கொடையாக பெறப்படுகின்ற நிலையான மற்றும் நுகர்வுச் பொருட்கள் ஒதுக்கீட்டுக் கணக்கினூடாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதால் சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்திற்காக சொத்துக்களை கணக்கீடு செய்ய கணக்கீட்டுக் கொள்கையொன்றை அடையாளப்படுத்த தேவையில்லை. | நுகர்வுப் பொருட்கள் நன்கொடைகளை கணக்கீடு செய்ய கணக்கீட்டுக் கொள்கையொன்றை அடையாளப்படுத்த வேண்டும். |

## 1.5.2. கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| விடயம் | தொகை ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 2,371,275 | திறைசேரியின் அங்கீகாரமின்றி நிதியத்தின் நடைமுறையல்லாத சொத்துக்களை திணைக்கள நிதிக்கூற்றுக்களிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்து 2021 ஆண்டில் 2020 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் மீண்டும் வெளியிடப்பட்டு இருந்ததுடன் அத்திகதியன்று இலவச சொத்துக்கள் மானியக் கணக்கில் ரூபா 24,350,099 ஆன மீதியை சொத்துக்கள் அகற்றும் கணக்கினூடாக செம்மையாக்கிய காரணத்தால் நடைமுறையல்லாத சொத்துக்களிற்குரியதாக ரூபா 12,640,730 ஆன அகற்றல் மிகையொன்று உருவானது. இம் மிகையை 2022 திசெம்பர் 31 திகதி நிதிநிலைமை கூற்றின் ஒதுக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் 2022 திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டிற்காக சமர்பித்த திணைக்கள நிதிக்கூற்றுக்களில் நிதியல்லா சொத்துக்களின் கீழ் இச் சொத்துக்கள் அறிக்கையிடப்பட்டுள்ள போதும் இச் சொத்துக்கள் பௌதீகரீதியாக குறிப்பாக அடையாளப்படுத்தி கணக்கு ஏடுகளில் அறிக்கையிட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | மத்திய அரசு, திறைசாலைகள் கைத்தொழிற் பிரவு மற்றும் சிறைக்கைதிகள் நலன்புரி பிரிவு போன்ற அனைத்து கணக்குகளினூடாகவும் காட்டப்பட்டுள்ள சொத்துக்களும் சிறைசாலை நிறுவனத்தினுள் காணப்படுவதால் அவ் அனைத்து சொத்துக்களையும் வெவ்வேறாக இனங்கண்டு பண்டகக் கணிப்பீட்டை மேற்கொள்வது கடினமாகையால் இரட்டை கணக்கெடுப்பு தவறு ஏற்படும் இயலுமை காணப்படுகின்றது. அதன் காரணமாக சொத்துக்கள் மீண்டும் கணக்கீடு செய்யப்படுவதால் இரட்டைப் பதிவு தவறு ஏற்படுவதை தவிர்க்க இவ் அனைத்து பிரவுகளிற்குமான சொத்துக்களை ஒதுக்கீட்டுக் கணக்கினூடாக காண்பித்து திணைக்களத்திற்குரிய அனைத்து சொத்துக்களையும் ஒரு கணக்கினூடாக சமர்ப்பிக்க 2020 ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் மீள அறிக்கையிடுவதற்கு முன்னர் அச் சொத்துக்கள் தெளிவாக பௌதீக ரீதியாக அடையாளப் படுத்தி அவற்றை கணக்கீடு செய்ய வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலித குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) 237 | களச்சிய வழங்கல்களிற்காக கொடுப்பனவு செய்யும் போது கொடுப்பனவு வவுசரில் பொருட்கள் கிடைத்துள்ளதாக மற்றும் குறித்த பொருட்கள் பதிவேட்டில் இருப்பு புத்தகங்கள் ஆகியவற்றில் அப்பொருட்களை உள்ளடக்கியுள்ளதாக சான்றிதழ் ஒன்றை இணைக்க வேண்டும். அனினும் வெலிக்கட, பூஸ்ஸ மற்றும் வட்டரெக்க சிறைக்சாலைகளில் சிறைக்கைதி நலன்புரி நிதியத்தினால் கொள்வனவு செய்த ரூபா 205,002 ஆன பண்டங்கள் இருப்பு புத்தகங்களில் உள்ளடக்கியிருக்காததுடன் கொடுப்பனவு வவுசர்களிலும் குறித்த பண்டங்கள் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | சிறைச்சாலை நிறுவனங்களில் நுகர்வுப் பண்டங்களை கணக்கீடு செய்ய தேவையான ஆலோசனைகளை நிதி ஆணையாளரின் 2023 மார்ச் 28 திதகி கடிதம் மூலம் அனைத்து நிறுவனங்களிலும் சிறைச்சாலை அதிகாரிகளை அறவூட்டயுள்ளதுடன் 2023 ஆண்டு முதல் குறித்த ஒவ்வொறு காலாண்டிற்கும் நிதியறிக்கையை தலைமையகத்திற்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முக்கியமாக குறித்த வெலிக்கட, பூஸ்ஸ மற்றும் வட்டரெக்க ஆகிய நிறுவனங்களில் அதிகாரிகள் மற்றும் அதற்கு தொடர்பான புனர்வாழ்வு உத்தியோகத்தர்கள் மற்றும் உபகரண களஞ்சியத்தை அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 237 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) 877 (2) (அ) | நிதியத்திற்கான தனி வங்கிக் கணக்கொன்று பேணிச் செல்லப்பட்டிருக்காததுடன் நலன்புரி நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ வங்கிக் கணக்கின் கீழ் நிறைவேற்றப்பட்டிருந்தது. | சிறைச்சாலை நலன்புரி நிதியத்திற்கு தனியான வங்கி கணக்கொன்றை திறப்பதற்குரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2022 நவம்பர் 29 திகதி கடிதத்தை அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் 877 (2) (அ) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 758,638 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 908,830 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 150,192 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் நிதியத்தினால் அவ்வித செலவும் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதும், மீளாய்வாண்டில் ரூபா 1,884,382 ஆன செலவுகள் மேற்கொண்டமை இவ்வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் முன்னேற்றத்தினை அளவீடு செய்வதற்காக செயலாற்றல் குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டிராததுடன், சிறைச்சாலைகளில் நடாத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களின் தன்மை, பங்குப்பற்ற வேண்டிய சிறை/சந்தேகநபர் எண்ணிக்கை, செலவிட நேரிடுகின்ற கிரயம் உள்ளடங்களாக முன்னைய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அந்த திட்டங்களின் பிரகாரம் முன்னேற்றத்தை அறிக்கையிடாத காரணத்தால் நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பிலான நிதி மற்றும் பௌதீக செயலாற்றலை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. | சிறைச்சாலை நலன்புரி நடவடிக்கைகளை நாளாதுவரையாக பேணிச் செல்ல 07 அங்கத்தவர்களுடன் கூடிய கட்டுப்பாட்டு குழுவொன்றை நியமிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அக் குழுவின் மூலம் 2023 ஆண்டிற்காக சிறைச்சாலை நலன்புரி கணக்கிற்குரிய முன்னேற்றத்தை மற்றும் செயலாற்றலை மீளாய்வு செய்யப்படும். | நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக முன்கூட்டிய திட்டமொன்று மற்றும் அந்த திட்டத்தின் பிரகாரம் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கு செயலாற்றல் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்தி மதிப்பீடுகளை மேற்கொண்டு முன்னேற்றத்தை அறிக்கையிட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1. பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதியத்திற்கு பாதீட்டின் மூலம் சிறைக்கைதிகள் நலன்புரிக்காக ரூபா இரண்டு மில்லின் ஒதுக்கியிருந்த போதும் அத் தொகை போதாத காரணத்தால் திணைக்களத்தின் செலவின தலைப்பிலிருந்து 03 செலவு விடயங்களின் கீழ் ரூபா 2,377,848,334 ஆன தொகையொன்றை செலவு செய்திருந்ததுடன் நிதியத்தின் | சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் வருமானம் நிச்சயமற்ற வருமானம் ஆகையால் நிதிய மீதி மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது. சிறைக்கைதிகளின் நலன்புரிக்கான உச்ச மட்டத்தை அடைந்து கொள்ளவெனில் திறைசேரியின் அல்லது அரசின் ஏனைய நிதி உதவியொன்று தேவைப்படுகிறது. | போதியளவான ஏற்பாட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்து, நிதியத்தை உறுவாக்கிய நோக்கத்தை அடைந்து கொள்ளக்கூடியவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதியத்தின் பாதீட்டு மதிப்பீட்டை |

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டு பெறுவனவு அளவு ரூபா 1,437,250 ஆன போதும் உள்ளவாறான பெறுவனவு அளவு ரூபா 2,651,796 ஆனதில் பாதீட்டு பெறுவனவை விட உற்றவாறான பெறுவனவு அளவு ரூபா 1,214,546 அதாவது 84.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும் நிதியத்தின் 10 பெறுவனவு தலைப்புகளிலிருந்து 07 பெறுவனவு தலைப்புகளினது பாதீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையிலான வித்தியாசம் 100 சதவீதம் முதல் 4,063 சதவீதம் வரையான வீச்சளவில் முறன்பட்டதால் பாதீட்டு மதிபிப்பீட்டை யதார்த்தமாக தயாரித்து கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்தி இருக்கவில்லை. | இந்த பாதீட்டு வருமானம் தொடர்பாக தங்களின் அவதானிப்பை ஏற்றுக் கொள்வதுடன் அந் நிலமை கடந்த 03 ஆண்டு கணக்கறிக்கையுடன் ஒப்பிடகையில் அவதானிக்கப்படுகின்றது. அந் நிலமையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை மற்றும் அம்மால் செலவிட வேண்டிய முறை தொடர்பாக கலந்துரையாடி தீரமானமொன்றை எடுக்க எதிர்பார்ப்பதுடன் திறைசாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் நியமித்த சிறைகைதிகள் நலன்புரி நிதிய கட்டுப்பாட்டு சபைக்கு முன்வைத்து தீர்த்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. | நடைமுறை சாத்தியமாக தயாரித்து கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படத்த வேண்டும். |